குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்

முன்னிலை: திருமதி.S.சர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
**விரைவு நீதிமன்றம் (மு**.கூ.பொ.)
ஓமலூர்.
எஸ்.டி.சி. 25/2022

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் **10** ஆம் தேதி புதன் கிழமை புகார்தாரரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. ஆர். சதீஸ்குமார், உதவியாளர் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தேவராஜ் | வயது | : |
| த/பெ | : நாராயணசாமி | தொழில்: | |
| ஊர் | : | | |
| வட்டம் | : ஓமலூர் | ஜாதி | : |
| மாவட்டம் | : சேலம் | தேதி | : 10.04.2024 |

குறுக்கு விசாரணை :

1. நான் மணிபிரபா என்ற டிராவல்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் என்பதை காட்டுவதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நான் மேற்படி மணிபிரபா டிராவல்ஸ் நிறுவனத்தை எனது வீட்டில் வைத்து தான் நடத்தி வருகிறேன். நான் ஊழியர்கள் வைத்து அவர்களுக்கு ஊதியம் கொடுக்க மேற்படி நிறுவனத்தை நடத்தி வருகிறேனா என்றால் இல்லை. அவ்வப்போது ஓட்டுநர்களை வைத்து அவர்களுக்கு ஊதியம் கொடுப்பேன்.

2. நான் கடந்த 20 வருடங்களாக மேற்படி டிராவல்ஸ் நிறுவனத்தை நடத்தி வருகிறேன். நான் மேற்படி நிறுவனத்தை நடத்துவதற்கு அரசாங்கத்திடம் அனுமதி ஏதும் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. நான் மேற்படி மணிபிரபா என்ற டிராவல்ஸ் நிறுவனத்தை நடத்தி வருவதாக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது பெயரிலோ அல்லது மேற்படி மணிபிரபா டிராவல்ஸ் நிறுவனத்தின் பெயரிலோ வாகனங்கள் ஏதும் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் எனது பெயரில் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. எனது பெயரில் ஒரு டெம்போ டிராவல் வேன் மற்றும் சுப்ட் டிசையர் காரும் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சுப்ட் டிசையர் வாகனத்தை 2020 ம் வருடமும் டெம்போ டிராவல் வேனை 2023 ம் வருடமும் வாங்கினேன். 2020 ம் வருடத்திற்கு முன்பு நான் வேறு வாகனங்கள் வாங்கினேன் என்றால் சரி. மேற்படி 2 வாகனங்களின் பதிவு சான்றை நீதிமன்றத்தில் ஒப்படைக்க தயாராக உள்ளேன் என்றால் சரி. மேற்படி 2 வாகனங்களும் மறு விற்பனை வாகனங்களாக தான் வாங்கினேன்.

4. மேற்படி 2 வாகனத்தின் மீதும் தற்போது வாங்கி கடன் நிலுவையில் உள்ளது. மாதம் ரூ.50,000/- முதல் ரூ.60,000/- வரை வருமானம் வரும். எனது வருமானத்திற்கான ஆவணங்கள் ஏதும் என்னிடம் இல்லை என்றால் சரி. நான் வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால் இல்லை. நான் ஓமலூர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் 2016 ல் இருந்து வங்கி கணக்கு வைத்துள்ளேன். எனக்கு ஓமலூர் ஸ்டேட் பேங்கில் வங்கியில் சுமார் 10 வருடங்களாக வங்கி கணக்கு உள்ளது. எனது ஓமலூர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கணக்கில் அதிகபட்சம் பணபறிமாற்றம் எவ்வளவு தொகைக்கு எந்த காலக்கட்டத்தில் நடந்தது என்றால் 2016 ம் வருடம் ரூ.28,00,000/-(ரூபாய் இருபத்தி எட்டு லட்சம் மட்டும்) வரை பணப்பறிமாற்றம் செய்துள்ளேன்.

5. நிலத்தை விற்பனை செய்து அதில் வந்த தொகையை நான் எனது ஓமலூர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கணக்கில் வைத்திருந்தேன். எனது வங்கி கணக்கில் மேற்படி ரூ.28,00,000/-(ரூபாய் இருபத்தி எட்டு லட்சம் மட்டும்) பணம் ஒரு மாதம் வரை இருந்தது. நான் குடியிருந்த விலாசம் எனது சொந்த வீடு தான். 2012 ம் வருடம் அந்த வீட்டை விற்பனை செய்துவிட்டேன். அதற்கு அருகில் ஒரு வீட்டில் வசித்து வருகிறேன். 12 வருடங்களாக நான் வேறு விலாசத்தில் தான் வசித்து வருகிறேன்.

6. நான் கடந்த 4 வருடங்களுக்கு முன்பு மேட்டூரை சேர்ந்த ராஜேஸ்வரி என்பவரிடம் ஓட்டுநராக வேலை செய்து வந்தேன் என்றால் சரியல்ல. நான் தற்போது பகுதி நேர ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன் என்றால் சரி. 2020 ம் வருடத்திற்கு பின்னிட்டு என்னுடைய பெயரில் அசையும் சொத்துக்களோ அல்லது அசையா சொத்துக்களோ உள்ளதா என்றால் உள்ளது. அதற்குண்டான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளீரா என்றால் தயாராக உள்ளேன். நான் ரூ.9,00,000/- எதிரிக்கு கடன் கொடுக்கும் அளவுக்கு என்னிடம் எப்போதும் பணப்புழக்கம் இருந்தது இல்லை என்றால் சரியல்ல.

7. 2020 மற்றும் 2023 ம் வருடங்களில் கடன் மூலமாக நான் வாகனங்கள் வாங்கியிருக்கும் பட்சத்தில் நான் வேறு ஒருவருக்கு கடன் கொடுக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. எனது பெயரில் ஒரு டெம்போ டிராவல் வேனை ஓமலூரில் உள்ள ஓம்சக்தி பைனான்ஸ் மூலமாக கடன் பெற்று வாங்கினேன். மற்றும் சுப்ட் டிசையர் காரை ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸில் கடன் பெற்று வாங்கினேன். மேற்படி இரண்டு பைனான்ஸ் நிறுவனத்திற்கும் நான் வட்டியை சரிவர செலுத்தவில்லை என்று எனக்கு அறிவிப்பு வந்துள்ளது என்றால் சரியல்ல. மேற்படி இரண்டு நிறுவனத்தின் உரிமையாளர்களை இவ்வழக்கு சாட்சிகளாக விசாரிக்க எனக்கு ஆட்சியேபனை இல்லை.

8. ஆஜர் எதிரியை எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றும் எவ்வாறு அறிமுகமானவர் என்றும் எனது மனுவிலும் பிரமானவாக்குமூலத்திலும் குறிப்பிட்டு

சொல்லவில்லை என்றால் சரி. எதிரி எனது உற்றார் உறவினர் என்று எனது மனுவிலும் பிரமானவாக்குமூலத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. ஆஜர் எதிரி எங்கு தொழில் நிறுவனம் வைத்து நடத்தி வருகிறார் என்றால் சென்னையில் கடந்த 20 வருடமாக ரயில்வே கம்பார்மெண்ட் தயாரிக்கும் நிறுவனத்தை நடத்தி வருகிறார். அவ்வப்போது ஒப்பந்தம் மற்றும் ரயில்வே கம்பார்ட்மெண்ட் தயாரித்து கொடுப்பார்.

9. எதிரி எத்தனை வருடங்களாக சென்னையில் குடியிருந்து வருகிறார் என்றால் அவர் சேலத்தில் தான் குடியிருந்து வருகிறார். எதிரி சென்னையில் தான் குடியிருந்து வருகிறார் என்றாலும் சேலத்தில் குடியிருக்க வில்லை என்றாலும் சரியல்ல. எதிரி சேலத்தில் குடியிருக்கிறார். அவரது கணவர் சென்னையில் குடியிருக்கிறார். எதிரியின் திருமணத்திற்கு பின்பு அவர் சென்னையில் தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. எதிரி சுமார் 7 வருடங்களுக்கு முன்பு எதிரி சென்னைக்கு சென்றுவிட்டார். அவ்வப்போது சேலத்திற்கு வந்து செல்வார்.

10. எதிரியின் அம்மா சேலத்தில் குடியிருக்கிறார் என்றால் சரி.அவருக்கு அவ்வப்போது உடல்நிலை சரியில்லாத போது எதிரி அவரை பார்ப்பதற்காக சேலத்திற்கு வருவார். எதிரி 09.04.2022 ம் வருடம் என்னிடம் கடனாக ரூ.9,00,000/- ஐ கேட்டார். மேற்படி தொகையை நான் ரொக்கமாக தான் எதிரியிடம் கொடுத்தேன். எதிரி என்னிடம் கடன் கேட்ட தேதியையும் கடன் தொகையை எவ்வாறு கொடுத்தேன் என்றும் தற்போது நீதிமன்றத்தில் தான் முதல் முறையாக கூறுகிறேன் என்றாலும் எனது மனுவிலும் பிரமான வாக்குமூலத்திலும் கூறவில்லை என்றால் சரியல்ல.

11. எதிரி எனது வீட்டிற்கு வந்து மேற்படி கடன் தொகையை பெற்று சென்றார். எதிரிக்கு நான் பணம் கொடுத்ததற்கான கண்ணுற்ற சாட்சிகள் யாரும் இல்லை என்றால் சரி. எதிரிக்கு பணம் கொடுத்ததற்கான வேறு ஆவணங்கள் ஏதும் நான் பெற்றேனா என்றால் இல்லை. எதிரி என்னிடம் எந்த வீட்டில் வைத்து கடன் பெற்று சென்றால் என்றால் காமராஜர் நகர், 4 வது வீதியில் உள்ள வீட்டில் வைத்து கடன் பெற்றார். மேற்படி வீட்டின் கதவு எண் எனக்கு தெரியாது.

12. நான் 12 வருடங்களாக மேற்படி காமராஜர் நகரில் உள்ள எனது வீட்டில் வசித்து வருவதாக நான் கூறியுள்ள நிலையில் அதன் கதவு எண் எனக்கு தெரியாது என்று நான் கூறுவது ஏற்கத்தக்காதாக இல்லை என்றால் நான் காமராஜர் நகரில் உள்ள கதவு எண் 85/12 **W** 11**D**1 என்ற வீட்டில் தான் தற்போது குடியிருக்கிறேன். எனக்கு வரும் தபால்கள் இந்த வீட்டிற்கு வந்துவிடுவதால் மேற்படி வீட்டின் கதவு எண் எனக்கு நினைவில்லை. நான் எனது பிரமான வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் நான் 12 வருடங்களாக குடியிருந்து வரவில்லை என்றால் சரி.

13. நான் பொய்யான விலாசம் குறித்த தகவலுடன் தாக்கல் செய்யப்பட்ட பிரமான

வாக்குமூலம் நீதிக்கு எதிரானது என்றாலும், ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. நான் பொய்யான தகவல்களுடன் நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலம் நீதிக்கு புறம்பானது என்பதால் அதனை நீக்கம் செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி சென்னையில் இருப்பதை தெரிந்து கொண்டு அவரது தாயார் விலாசத்திற்கு அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியின் கணவர் பெயர் எனக்கு தெரியாது.

14. எதிரியின் கணவர் தான் வியாபாரம் செய்து வருகிறார் என்றாலும் எதிரி இல்லத்தரசியாக இருக்கிறார் என்றாலும் சரி. எதிரி எந்த வியாபாரமும் செய்யாமல் இல்லத்தரசியாக இருக்கிறார் என்பது தெரிந்து அவருக்கு எவ்வாறு கடன் கொடுத்தேன் என்றால் அவரது பெயரில் யோகேஷ் என்ஜினியரிங் வொர்க்ஸ் என்ற நிறுவனம் உள்ளதால் அவர் கடனை திருப்பி கொடுத்துவிடுவார் என்னி கடன் கொடுத்தேன். மேற்படி யோகேஷ் என்ஜினியரிங் வொர்க்ஸ் என்ற நிறுவனத்தை எதிரி தான் நடத்தி வருகிறார் என்பதற்கான ஆவணத்தை நான் பார்க்கவில்லை.

15. எதிரிக்கு அசையும் சொத்து மற்றும் அசையா சொத்துக்கள் இருப்பதற்கான ஆவணங்கள் ஏதும் நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அவருக்கு சொத்து உள்ளதாக கூறியிருக்கிறார். எதிரிக்கு எந்த இடத்தில் என்ன மதிப்பிளான சொத்து உள்ளது என்று நான் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரி. எதிரியை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் எதிரியின் வீட்டாருக்கு நான் பகுதிநேர ஓட்டுநராக அவ்வப்போது சென்றுள்ள வகையில் எனக்கு எதிரியை தெரியும்.

16. எதிரிக்கு நான் பகுதிநேர ஓட்டுநராக அவ்வப்போது இருந்துள்ளதை தவிர்த்து வேறு எந்த ஆவணமும் சாட்சியமும் இல்லாமல் ரூ.9,00,000/- ஐ கடனாக கொடுத்ததாக நான் சொல்வது பொய் என்றாலும் ஏற்றுக் கொள்ளத்தக்கது என்றாலும் சரியல்ல.

இருதரப்பு வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி 17.04.2024 ம் தேதி ஒத்தி வைக்கப்படுகிறது.